வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port
SAGARMALA PORT-LED PROSPERITY
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Press Release No: 22 date: 02.06.2020

## Indian Navy Ship 'Jalashwa' arrives at V.O. Chidambaranar Port, Tuticorin, with 686 Stranded Indian nationals from Srilanka

Today on 02.06.2020, Indian Navy Ship 'Jalashwa' repatriated 686 Indian nationals from Colombo as a part of the ongoing 'Samudra Setu' mission to evacuate Indians stranded in different parts of the world by Sea. As scheduled, INS 'Jalashwa' arrived at outer anchorage of the Port at 0800 hrs and was docked at Berth No.14 of the Port at 0930 Hrs.



Among the 686 number of Indian nationals, 9 Indian fishermen (5 from Nagapattinam and 4 from Pudukottai), released by Srilankan Government during the Month of March, 2020, who could not return to India, were also repatriated.

On arrival, the evacuees from Srilanka were screened by the Port Health Officials and their lugguages were sanitized. On issue of PPE kits by the Port to all passengers, the passengers were boarded into 25 waiting buses, segregated district-wise and transited to Passenger terminal. On reaching the passenger terminal, the antecedents of the passengers were checked and were asked to download and configure 'Aarogya Setu' app in their smartphones, using the free Wi-fi provided by the Port Authority. Thereafter, Customs and immigration formalities were completed and the passengers were guided to the respective buses for their onward destinations. Refreshment breakfast and lunch for all the passengers were jointly arranged by the Port Authority and District Administration.

The entire operations were meticulously guided by Shri T.K. Ramachandran, I.A.S, Chairman, V.O. Chidambaranar Port Trust, Shri Sandeep Nanduri, I.A.S., District Collector, Shri Arun Balagopalan, I.P.S., Superintendent of Police, Shri B. Vishnu Chandran, I.A.S, Additional Collector, Shri Bimal Kumar Jha, Deputy Chairman, V.O.Chidambaranar Port Trust, Capt. Aasish Kumar Sharma, Commanding Officer, INS Kattabomman and Shri V. Venkateswaran, IRS., Joint Commissioner, Customs House, Tuticorin.

Shri T.K. Ramachandran stated that all arrangements for the arrival of those repatriated were planned well in advance and thanked the District Administration, Indian Navy, Customs, Immigration, PHO and Senior Officers of Port for the coordinated efforts taken for the safe repatriation of Indian nationals through VOC Port, Tuticorin.

The next repatriation of Indian nationals through V.O.Chidambaranar Port, Tuticorin from Maldives and Iran are scheduled on 07.06.2020 and 21.06.2020 respectively.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port
SAGARMALA
PORT-LED PROSPERITY
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

பத்திரிக்கை செய்தி எண் : 22 தேதி :02.06.2020

**தூத்துக்குடியிலுள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ மூலம் கொலும்பில் சிக்கி தவித்த 686 இந்தியர்கள் தாயகம் வந்தடைந்தனர்**

உலகளவில் தாக்கப்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பினால் வெளிநாடுகளில் சிக்கி தவித்து வரும் இந்திய குடிமக்களை தாயகத்திற்கு அழைத்து வருவதற்கு இந்திய அரசு ‘சமுத்திர சேது’ என்ற திட்டத்தின்கீழ் கப்பகளின் வாயிலாக தாயகம் அழைத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று 02.06.2020 இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ கொழும்பில் சிக்கி தவித்த 686 இந்தியர்களை தூத்துக்குடியிலுள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு அழைத்து வந்தது. இந்திய கடற்படை கப்பல் ‘ஜலாஷ்வா’ காலை 0930 மணியளவில் வ.உ.சிதம்பரனார் துறைமுக கப்பல்தளம் 14-ஐ வந்தடைந்தது.



இக்கப்பலின் வாயிலாக 686 இந்தியர்கள் தாயகம் வந்தடைந்தனர். இதில் இலங்கை அரசு சிறைபிடித்து வைத்திருந்த 9 இந்திய மீனவர்களை கடந்த மார்ச் மாதம் இறுதியில் விடுதலை செய்தது (இதில் 5 மீனவர்கள் நாகப்பட்டினத்தை சார்ந்தவர்கள் மற்றும் 4 மீனவர்கள் புதுகோட்டையை சார்ந்தவர்கள்) இவர்களும் இக்கப்பலின் மூலம் தாயகம் வந்தடைதுள்ளனர்.

இக்கப்பல் வந்தவுடன் பயணிகள் அனைவரையும் கப்பலிருந்து இறக்கப்பட்டவுடன் துறைமுக சுகாதார அமைப்பின் மூலம் முழு பரிசோதனைகுட்படுத்தப்பட்டு அவர்களது சாமான்கள் கிருமிநாசினி தெளிக்கப்பட்டது. மேலும் பயணிகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE kits) வழங்கி பின்பு பயணிகள் 25 பேருந்துகளில் மாவட்ட ரீதியாக பிரிக்கப்பட்டு பயணிகள் முனையத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள்.

பயணிகள் முனையத்திற்கு பயணிகள் வந்தவுடன் பயணிகள் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டு பின்பு இலவச wi-fi இணைப்பின் மூலம் அனைத்து பயணிகள் கைபேசியிலும் ‘ஆரோக்கிய சேது’ செயலியை பதிவியிறக்கம் செய்து செயல்படுத்த வலுயுறுத்தப்பட்டார்கள். இந்த இலவச wi-fi வசதியை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் ஏற்பாடு செய்திருந்தது. அதன் பிறகு பயணிகள் சுங்கதுறை மற்றும் குடியுரிமை துறையின் அனைத்து விதிமுறைகளின்படி சரிபார்க்கப்பட்டு பின்பு

பயணிகள் பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் பயணிகளுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவினை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர், திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், திரு. அருண் பாலகோபாலன், இ.கா.ப. காவல்துறை கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம், திரு. பி. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் (கூடுதல் பொறுப்பு), தூத்துக்குடி மாவட்டம், திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் துணைதலைவர், கேப்டன் ஆசிஷ் குமார் சர்மா, கமாண்டிங் அதிகாரி, ஐ.என்.எஸ். கட்டபொம்மன் மற்றும் திரு. வெங்கடேஸ்வரன், இ.வ.ப, கூட்டு ஆணையர், சுங்கதுறை ஆகியோர் இந்த செயல்பாடுகள் அனைத்தையும் உடனிந்து மிக உன்னிப்பாக கவனித்து வழிநடத்தினர்.

மேலும் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் அவர்கள் இக்கப்பல் வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளை வெகுநாட்களுக்கு முன்னதாகவே திட்டமிட்டு செயல்படுத்தினோம் என்று கூறினார். மேலும் அவர் வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வாயிலாக தாயகம் வருவதற்கு அனைத்து முயற்சிகளையும் இணைந்து மேற்கொண்ட தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம், இந்திய கடற்படை, சுங்கதுறை, குடியுரிமை துறை, துறைமுக சுகாதார அமைப்பு மற்றும் மூத்த துறைமுக அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

அடுத்து 07.06.2020 மற்றும் 21.06.2020 ஆகிய தேதிகளில் மாலதீவு மற்றும் ஈரான் நாடுகளிலுள்ள இந்தியர்கள் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வாயிலாக தாயகம் வர உள்ளனர்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி